# கொரோனா வைரஸ் நோய் -19

## வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்

### கீழ்கண்ட அறிகுறிகள் ஏதேனுமிருப்பின் கொரோனாவாக இருக்கலாம்



காய்ச்சல்



இருமல்



தலைவலி



தொண்டை கரகரப்பு



சுவாசிப்பதில் சிரமம்



உடல்வலி



வெகுசிலநாட்களாக வாசனை அறியாத்தன்மை



வெகுசிலநாட்களாக சுவை அறியாத்தன்மை

**எச்சரிக்கை**

அறிகுறி இல்லாகுடும்ப உறுப்பினர்கள், அறிகுறி உள்ள குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பில் இருப்பின் உடல் நிலையை கவனித்தல் மற்றும் கொரோனா சோதனை கட்டாயம் செய்துகெள்ளவேண்டும்.

### சுயபாதுகாப்பில் உள்ளபோது

- ✓ கொரோனா பரிசோதனை செய்யவும்
- ✓ இரத்த ஆக்சிஜன் செறிவு 93% க்கு குறைந்தால் மருத்துவரின் ஆலோசனை பெறவேண்டும்
- ✓ மருத்துவர் ஆலோசனையின்படி இரத்த பரிசோதனை செய்யவும்

### செய்யவேண்டியவை



வீட்டிலே இருக்கவேண்டும்



கிருமி நாசினி கொண்டு கைகளை அடிக்கடி கழுவவேண்டும்



தனிமைப்படுத்திக் கொண்டு ஓய்வெடுக்க வேண்டும்



குடும்பஉறுப்பினர்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும்



சுத்தமான காற்றோட்டம் பெற வீட்டின் ஜன்னல்களை திறந்து வைக்க வேண்டும்

### கண்காணித்தல்



4 மணிநேரத்திற்கு ஒருமுறை உடல் வெப்பநிலை பரிசோதிக்க வேண்டும்



4 மணிநேரத்திற்கு ஒருமுறை ஆக்ஸிமீட்டர் கொண்டு இரத்த ஆக்ஸிஜன் செறிவு பரிசோதிக்க வேண்டும்

**எச்சரிக்கை**

**கீழ்கண்டவற்றில் ஏதேனுமிருப்பின் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்**

- ஆக்ஸிஜன் செறிவு 93% க்கு குறைவு
- சுவாசிப்பதில் சிரமம் மற்றும் மயக்கம்

### மருத்துவம்



தண்ணீர், பழச்சாறு சூப் மற்றும் இளநீர் பருகவும்



கவிழ்ந்து படுத்து நன்கு சுவாசிப்பதன் மூலம் இரத்த ஆக்ஸிஜனின் அளவை அதிகப்படுத்தலாம்




6 மணி நேரத்திற்கு ஒருமுறை பேராசிட்டமால் மாத்திரை மற்றும் இருமல் மருந்து தேவைப்பட்டால் உட்கொள்ளவேண்டும்



வைட்டமின் & மினரல் சத்துள்ள உணவு மற்றும் மாத்திரைகள் எடுத்துகொள்ளவும்



நாள் ஒன்றுக்கு மூன்றுமுறை ஆவிபிடித்தல் மற்றும் வெதுவெதுப்பான நீர் பயன்படுத்தி கொப்பளிக்கவும்

### செய்யக் கூடாதவை

- ✕ வீட்டுப்பாதுகாப்பில் இருக்கும் போது ரெம்டெசிவிர் *(Remdesivir)* மருந்தை உபயோகிக்கக்கூடாது
- ✕ படிசோனைட் *(Budesonide)* மருந்தை உபயோகித்து ஆவிபிடித்தல் கூடாது
- ✕ மருத்துவ ஆலோசனை இல்லாமல் ஆக்சிஜன் சிலிண்டரை பயன்படுத்தி சுவாசிக்க கூடாது

**மருத்துவர் ஆலோசனை வழங்கும் பட்சத்தில் பின்குறிப்பிட்ட மருத்துவ முறைகளை பின்பற்றவும்**

1. 5 நாட்களுக்கு மேல் நோய் அறிகுறி இருந்தால் படிசோனைட் *(Budesonide)* அளவுக்குறியீடுள்ள செயற்கை சுவாசக்கருவி மூலமாகவோ அல்லது உளர் பொடி உள்ளிழுப்பான் மூலமாகவோ பயன்படுத்தலாம்
2. ஐவர்மெக்டின் **(Ivermectin)** / ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் **(Hydroxychloroquine)** மருந்துகளை பயன் படுத்தலாம்
3. அறிகுறிகள் 7 நாட்களுக்கு அதிகமாக இருந்தால், மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகு குறைந்த அளவு ஸ்டீராய்டு **(Steroid)** மருந்துகளை பயன் படுத்தலாம்
4. தேவையான அளவு ஆன்டிபயாடிக்ஸ் **(Antibiotics)** எடுக்கலாம்.

எய்ம்ஸ் *(AIIMS)* / ஐ.சி.எம்.ஆர் *(ICMR)* - கோவிட் - 19 *(COVID -19)*
தேசிய பணிக்குழு /கூட்டு கண்காணிப்புக் குழு *(Dte.GHS)*
சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்
இந்திய அரசு